7

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF BLACK GRANITE QUARRY OF M/s TAMILNADU MINERALS LIMITED IN AN EXTENT AREA OF 15.47.5 HECTARE AT SF.NO.331/1 VEERAMANGALAM B VILLAGE AND 148(P) MAHANKALIGAPURAM VILLAGE, R.K.PET TALUK, TIRUVALLUR DISTRICT ON 20-09-2023 AT 11.00 AM BY TAMILNADU POLLUTION CONTROL BOARD, TIRUVALLUR DISTRICT.**

| | | |
|---|---|---|
| Project Name | : | **BLACK GRANITE QUARRY BY TAMILNADU MINERALS LTD** |
| Place | : | **SF.NO.331/1 VEERAMANGALAM VILLAGE AND 148(P) MAHANKALIGAPURAM VILLAGE, R.K.PET TALUK, TIRUVALLUR DISTRICT** |
| Date and Time | : | **20.09.2023 AT 11.00 AM** |
| Presence of | : | 1. Thiru A. RAJKUMAR., M.A., B.Ed., District Revenue Officer., Tiruvallur District<br>2. Thiru P.Ravichandran District Environmental Engineer. Tamilnadu Pollution Control Board, Tiruvallur District<br>3. List of public participants are attached. |
| Project Head | : | **Thiru E. Ganesan, Deputy Manager, M/s Tamilnadu Minerals Limited** |

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Truvallur has welcomed, the District Revenue officer and the public for the Public Hearing. He said that the proposed project of Black Granite Quarry at S.F.no.331/1 Veeramangalam B Village and S.No. 148 (p) Mahankaligapuram village, R.K.Pet taluk, Tiruvallur District by M/s. Tamilnadu Minerals Limited for which Environmental Clearance is required from the State Environmental Impact Assessment Authority, Tamilnadu under EIA Notification, 2006. Environmental Impact Assessment report prepared as per terms of conditions issued by Environment Impact Assessment Committee,

the public notice informing the Public Hearing was published in two news paper namely "New Indian Express" in English & "Dinakaran" in Tamil on 18-08-2023 and today 20-09-2023, Public Hearing is arranged.

On behalf of M/s. Tamilnadu Minerals Limited, Thiru E. Ganesan, Deputy Manager, have presented in detail about the activity and the impact of environment of the proposed Common Bio-Medical Waste Treatment and Disposal Facility.

Following the presentation, the public were invited to express their views and concerns, if any by clearly indicating their name and the village, to which he/she belongs to by the District Environmental Engineer, Tiruvallur. Further he also added that the views, concerns and queries of the public will be recorded both audio and video and submitted to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu.

Following this, the details of the public who have registered their views are given below

**Thiru. Palani, Mahankaligapuram Village.**

There are 17 families along this hill and 600 families in this panchayat. If this quarry is established, there will be more noise, children studies will affect and it will definitely affect the livelihood. I have already seen such quarries. There will be definitely air pollution. Mountain resources, natural resources and agriculture will all be affected. That is our livelihood. All the people are here against it. He informed that we will give a letter signed by all through this forum.

**Tmt. Visalatchi Arumugam, Mahankaligapuram Village.**

There are 674 families in this panchayat. We want to grow trees and plants in this area. But you are proposed to destroy. Further your choice.

**Tmt Tamilselvi, Mahankaligapuram Village.**

Children go to the school through it. School buses passes that way.. There are coats and cows here and we want this mountain.

**Thiru. P.Subramani, Ex. President, Mahankaligapuram.**

Lets lay the foundation to build a house. The distance is only 100 meters. That is the way. 2 people have already died after the stone broke. There is a route along this hill. There is agriculture. If the scheme comes, it will be affected and hence no need of this quarry.

***As everyone is silent, the District Environmental Engineer, TNPCB, Tiruvallur aksed if anyone else wished to comment.***

***District Revenue Officer said that the public to register their views in the forum. These views will be recorded and to forwarded to the State Environmental Impact Assessment Authority. Many people came here and particularly more women. You can post your views about the quarry.***

**Thiru Tamilarasan. Panchayat President, Mahankaligapuram.**

There is a road on bothsides of the hill. 5. 6 buses goes. There is a house built for 2 people next to the hill. They have already said that they don't want this project.

**Thiru Mahendiran, Mahankaligapuram Village.**

There are 25 residences, land near this project. we do agriculture. so don't want this project.

**Public, Not mentioned their names.**

We have our houses, children and do farming. If we want to go to the shop or school, that is the way. So everyone opposed this project and not allowing it.

As many of public refused to register their names, the District Revenue Officer asked everyone to register their names. However, the public refused to register stating that they would consider it a sign of consent of the project.

**Tmt Radha and Vani. Mahankaligapuram Village.**

we have our houses, children and do farming. If we want to go to the shop or school, that is the way. Everyone has a problem. Then it is customary to get water.

Following this, the District Environmental Engineer stated that the meeting ended as no one came forward to comment, He also informed that the hearing report will be sent to the participants of the hearing through audio and video CDs, and any comments received during the hearing will be forwarded to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu through Tamilnadu Pollution Control Board, Chennai-32.

As there were no questions from the public, the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board closed the hearing.

District Environmental Engineer
Tamil Nadu Pollution Control Board,
Tiruvallur.

District Revenue Officer,
Tiruvallur District

**District Collector,**
**Tiruvallur District.**

**திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை வட்டம், புல எண் : 331/1 வீரமங்களம் பி கிராமம், மற்றும் புல எண் 148 (பி) மஹான்களிகாபுரம் கிராமங்களில் 15.47.5 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் அமைய உத்தேசித்துள்ள கருப்பு கிரானைட் குவாரி குறித்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 20/09/2023 அன்று காலை 11.00 மணியளவில் ஆர்.கே.பேட்டை வட்டம், மஹான்களிகாபுரம் கிராமம், அம்மன் கோயில் மைதானத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் திருவள்ளூர் மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்பெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கைகள் விபரங்கள் :**

**திட்டத்தின் பெயர் :** கருப்பு கிரானைட் குவாரி.

**இடம் :** புல எண் : 331/1 வீரமங்களம் பி கிராமம், மற்றும் புல எண் 148 (பி) மஹான்களிகாபுரம் கிராமம், ஆர்.கே. பேட்டை வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்,

**நாள் மற்றும் நேரம் :** 20/09/2023 அன்று காலை 11.00 மணி

**முன்னிலை :**

1. திரு ஆ. ராஜ்குமார்., M.A., B.Ed.,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   திருவள்ளூர் மாவட்டம்.
2. திரு ப. ரவிச்சந்திரன்., எம்.இ.,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்.
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   திருவள்ளூர் மாவட்டம்.
3. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்குப் பெற்ற அனைவரின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**திட்ட அமைப்பாளர்:** திரு இ.கணேசன், துணை மேலாளர்., தி/ள். தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் .

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவள்ளூர் அவர்கள், மாவட்]ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். பின்னர், திரு இ.கணேசன், துணை மேலாளர், தி/ள்

தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் நிறுவனத்தால், **புல எண்** : 331/1 வீரமங்களம் பி கிராமம், மற்றும் புல எண் 148 (பி) மஹான்களிகாபுரம் கிராமங்களில் 15.47.5 ஹெக்டர் **பரப்பளவில்** அமைய உத்தேசித்துள்ள கருப்பு கிரானைட் குவாரி தொடர்பாக திட்டமிட்டுள்ளதை கூறினார். இதற்கான சுற்றுச்சூழல் அனுமதியை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் பெற வேண்டியுள்ளதால், சுற்றுச்சூழல் வல்லுனர்கள் மதிப்பீட்டு குழுக் கூட்டத்தில் பரிந்துரைத்த கடிதத்தில் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தயாரிக்கப்பட்டு, பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்திற்கான அறிவிப்பு 18/08/2023 அன்று நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் என்கின்ற ஆங்கில மற்றும் தினகரன் என்கின்ற தமிழ் தினசரிகளிலும் வெளியிடப்பட்டு இன்று 20/09/2023 பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

கருப்பு கிரானைட் குவாரி தொடர்பான விளக்கங்களையும் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தினைப் பற்றியும் தி/ள் தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக திரு இகணேசன், துணை மேலாளர் எடுத்துரைத்தார்.

அதன் பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவள்ளூர் அவர்கள் பொதுமக்களை, தங்கள் பெயர் மற்றும் ஊர் பெயர் குறிப்பிட்டு திட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றை எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தாங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஒலி மற்றும் ஒளி அதாவது ஆடியோ மற்றும் வீடியோ மூலமாக பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து தங்களது கருத்துக்களை பதிவு செய்த நபர்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகின்றது.

**திரு. பழனி, மஹான்களிகாபுரம் கிராமம்.**

இந்த மலையை ஒட்டி 17 குடும்பங்கள் மற்றும் இந்த பஞ்சாயத்தில் 600 குடும்பங்கள் உள்ளன. இந்த குவாரி அமைந்தால் கண்டிப்பாக வாழ்வாதாரம் பாதிக்கும். இரைச்சல் அதிகமாக இருக்கும், குழந்தைகள் படிப்பு அதிகமாக பாதிக்கப்படும். ஏற்கனவே இதுபோன்ற குவாரிகளை பார்த்துள்ளேன். கண்டிப்பாக காற்று மாசு இருக்கும். மலை வளம், இயற்கை வளம் மற்றும் விவசாயம் அனைத்தும் பாதிக்கும். எங்களுடைய வாழ்வாதாரமே அதுதான். இங்குள்ள மக்கள் அனைவரும் எதிர்க்கின்றோம். இதனை அனைவரும் கையொப்பம் இட்டு கடிதம் மூலம் தருகின்றோம் என தெரிவித்தார்.

**திருமதி. விசாலாட்சி ஆறுமுகம், மஹான்களிகாபுரம் கிராமம்.**

இந்த பஞ்சாயத்தில் 674 குடும்பங்கள் உள்ளது. இந்த சுற்று வட்டாரத்தில் மரம் வளர்க்கனும், செடி வளர்க்கனும் நினைக்கின்றோம். ஆனால் நீங்க அழிக்கனும்னு ஏற்பாடு செய்கிறிங்க. மேற்கொண்டு உங்க விருப்பம்.

**திருமதி. தமிழ்செல்வி, மஹான்களிகாபுரம் கிராமம்.**

குழந்தைகள் அந்த வழியாக பள்ளிக்கு செல்கின்றனர். பள்ளிப் பேருந்துகள் அந்த வழியாக தான் செல்கின்றன. இங்கு ஆடு, மாடு இருக்கு, எனக்கு இந்த மலை வேண்டும் என்று கூறினார்.

**திரு. பி. சுப்பிரமணி, முன்னால் தலைவர், மஹான்களிகாபுரம் கிராமம்.**

வீடு கட்ட அடித்தளம் போட்டிருக்கோம். 100 மீட்டர் தான் இடைவெளி. வழி அதுதான். ஏற்கனவே கல் உடைந்து 2பேர் இறந்துவிட்டார்கள். இந்த மலையை ஒட்டி வழித்தடம் உள்ளது. விவசாயம் உள்ளது. இத்திட்டம் வந்தால் பாதிக்கும் எனவே வேண்டாம் என கேட்டுகொண்டார்.

***அனைவரும் மேற்கொண்டு பேசாமல் இருந்ததால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவள்ளூர் அவர்கள் வேறு எவரேனும் கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா என வினவினார்.***

மாவட்ட வருவாய் அலுவலர் *அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்வதற்கு தான் இந்த திட்டம். இந்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க* மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். *இங்கு நிறைய மக்கள் வந்திருக்கீங்க. பெண்கள் நிறைய இருக்கீங்க. தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம்.*

**திரு. தமிழரசன் பஞ்சாயத்து தலைவர், மஹான்களிகாபுரம் கிராமம்.**

இம்மலையின் இரண்டு பக்கமும் ரோடு உள்ளது. 5, 6 பஸ் செல்கிறது. மலையை ஒட்டி 2 பேருக்கு வீடு கட்ட பட்டா குடுத்து இருக்காங்க. ஏற்கனவே இத்திட்டம் வேண்டாம் என தெரிவித்துள்ளனர் என தெரிவித்தார்.

**திரு. மகேந்திரன், மஹான்களிகாபுரம் கிராமம்.**

இந்த திட்டம் அருகில் 25 வீடு நிலம் உள்ளது. விவசாயம் செய்கின்றோம். அதனால் இத்திட்டம் வேண்டாம் என தெரிவித்தார்.

**பொதுமக்கள், பெயர் சொல்ல விருப்பமில்லை**

எங்க வீடு, குழந்தைகள் இருக்காங்க, விவசாயம் செய்கின்றோம், கடைக்கு, பள்ளிக்கூடம் போகனும் என்றால் அந்த வழி தான். எனவே அனுமதிக்க மாட்டோம் என அனைவரும் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

பலர் தங்கள் பெயர்களை பதிவிட மறுத்ததால், மாவட்ட வருவாய் அலுவலர், அனைவரையும் தங்கள் பெயர்களை பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், பொதுமக்கள் பதிவிட்டால் இத்திட்டத்திற்கு சம்மதம் எனக் கருதிடுவார்கள் என தெரிவித்து பதிவிட மறுத்து விட்டனர்.

**திருமதி ராதா மற்றும் வாணி., மஹான்களிகாபுரம் கிராமம்,**

எங்க வீடு, குழந்தைகள் இருக்காங்க, விவசாயம் செய்கின்றோம், கடைக்கு, பள்ளிக்கூடம் போகனும் என்றால் அந்த வழி தான். எல்லாருக்கும் பிரச்சனை தான். பிறகு தண்ணீர் கிடைப்பது கஸ்டம் தான்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டம் முடிவடைந்ததாக தெரிவித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு கருத்து கேட்பு அறிக்கையை பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒளி குறுந்தகடுகள், கேட்புக்கூட்டத்தில் நடவடிக்கையின் போது எழுத்து மூலமாக பெறப்பட்ட கருத்துக்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் கேள்விகள் எதுவும் எழாததால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், **தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்** கருத்து கேட்பு கூட்டத்தை முடித்து வைத்தார்.

29/9/23
**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவள்ளூர்.**

29/9/23
**மாவட்ட வருவாய் அலுவலர்**
**திருவள்ளூர் மாவட்டம்.**

29/09
**மாவட்ட ஆட்சியர்**
**திருவள்ளூர் மாவட்டம்**